## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கய்யா | மதம் | : இந்து |
| த/பெ | : ரங்கய்யா | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : ராமலிங்காபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

01.09.2025

<u>வா.சா. 1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

2. என் தரப்பில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தூய அடங்கல் பதிவேடு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ 6 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அப்பாவின் இறப்பு சான்று தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அம்மா நாகம்மாள் இறப்பு சான்று தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அப்பாவின் வாரிசு சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு**

**சான்று வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தூய அடங்கல் பதிவேடு வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** புல வரைபடம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம் வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.126ல் என் அப்பா பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிரிவு 63 BSAன் கீழான சான்று தாக்கல் செய்கிறேன். **(சான்று வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)